**PRIMARY SCHOOL**

ஆண்டிறுதித் தேர்வு

தமிழ்மொழி - ( தாள் 2)

பெயர் : ____________________

வகுப்பு : தொடக்கநிலை 5 /___

தேதி : ________

நேரம் : 1 மணி 40 நிமிடங்கள்

பெறவேண்டிய மதிப்பெண்கள் : 90

பெற்ற மதிப்பெண் : _____

மாணவர்களுக்கான குறிப்புகள்

1. கொடுக்கப்பட்டிருக்கும் எல்லாக் கேள்விகளுக்கும் விடையளிக்க வேண்டும்.

2. கேள்விகளுக்கு மேல் கொடுக்கப்பட்டிருக்கும் விளக்கங்களை நன்றாகப் படிக்கவும்

3. நேரத்தை வீணாக்காமல் தெரிந்தவற்றை முதலில் செய்யவும்.

32(

www.testpapersfree.com

P 5

SA-2

நல்ல மனம்

தேர்வுத்தாள் - 5




பள்ளிக்கு
வழியில்
இன்னிசை
அவ்விடத்திற்கு

கண்பார்வையற்றவர்
இசைக்கருவி
பெட்டியின் உள்ளே
உதவி செய்யுமாறு

321

P5 | SA2 - 5

www.testpapersfree.com

# தேர்வுத்தாள் - 5
SA-2

'அ' பிரிவு

அ.) 1 முதல் 6 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)

மேட்டுக்குடி என்ற கிராமத்தில் காளி என்பவன் அடுப்புக்கரி வியாபாரம் செய்து வந்தான். (Q1) _______ வீட்டு வாடகையைப் பகிர்ந்துகொள்ள அவன் இன்னொருவனைத் தேடினான். ஒருநாள் தன் சிறிய வயது நண்பனைப் பார்த்த (Q2) _______ ஒரு யோசனை தோன்றியது. துணிகளைத் துவைக்கும் வண்ணனாக இருந்த நண்பனை, அவன் தன்னோடு தங்கி (Q3) _______ பகிர்ந்துகொள்ளக் கேட்டான். நண்பனுக்கு காளியைப் பார்த்ததில் மகிழ்ச்சி என்றாலும், காளியின் வேண்டுகோளை அவனால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

"(Q4) _______! நீ அடுப்புக்கரி வியாபாரம் செய்பவன். நான் கஷ்டப்பட்டு வெளுத்துத் தூய்மையாக்கும் ஆடைகளை (Q5) _______ அடுப்புக்கரித் தூள் அழுக்காக்கிவிடும். அதனால், நாம் இருவரும் ஒரே (Q6) _______ தங்குவது கடினம்," என்று கூறி விடைபெற்றான். தன் நண்பனின் பதிலைக் கேட்ட காளி ஒன்றும் சொல்லாமல் சிலையாய் நின்றான்.

1. (1) தனக்கு
   (2) தன்னால்
   (3) தன்னுடன் ( )
   (4) தன்னை

2. (1) காளிக்கு
   (2) காளியிடம்
   (3) காளியோடு ( )
   (4) காளியின்

3. (1) வாடகையுடன்
   (2) வாடகைக்கு
   (3) வாடகையை ( )
   (4) வாடகையிலிருந்து



322

www.testpapersfree.com

4. (1) நண்பா
(2) நண்பனுடைய
(3) நண்பனுக்கு
(4) நண்பனோடு
( )

5. (1) உனக்கு
(2) உன்னால்
(3) உன்னோடு
(4) உன்னுடைய
( )

6. (1) வீடு
(2) வீட்டில்
(3) வீட்டின்
(4) வீட்டை
( )



www.testpapersfree.com

A2 செய்யுள் / பழமொழி

**Q7 முதல் Q12 வரையுள்ள செய்யுள்/பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)**

Q7 அடக்கம் __________ பொன் தரும்.

(1) கோடி
(2) நூறு
(3) ஆயிரம்
(4) அளவில்லா

( )

Q8 அன்பிலார் எல்லாம் __________ அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

(1) நமக்குரியர்
(2) தனக்குரியர்
(3) எனக்குரியர்
(4) தமக்குரியர்

( )

Q9 சுடினும் செம்பொன் தன்னொளி __________.

(1) கெடாது
(2) தேடாது
(3) வேண்டாது
(4) மாறாது

( )

Q10 செயற்கரிய செய்வார் __________ சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

(1) நல்லவர்
(2) பெரியர்
(3) வல்லவர்
(4) சான்றோர்

( )



324

www.testpapersfree.com

Q11 ____________ ஆகாததும் ஆகும்.

(1) பண்பிருந்தால்
(2) அன்பிருந்தால்
(3) குணமிருந்தால் ( )
(4) பொருளிருந்தால்

Q12 மகன் தந்தைக்கு ஆற்றும் ____________ இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனுஞ் சொல்.

(1) கடமை
(2) தொண்டு
(3) நன்றி ( )
(4) உதவி



32

www.testpapersfree.com

**B3 தெரிவுவிடைக் கருத்தறிதல்**

பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படி

செல்வியும் மாலாவும் பள்ளி நண்பர்கள். அவர்கள் இருவரும் ஒரே வகுப்பில் படிக்கும் மாணவிகள். அவர்கள் நெருங்கிய தோழிகளாக இருந்தார்கள். நட்புக்குச் சிறந்த **உதாரணமாக** அவர்கள் திகழ்ந்தார்கள். அவர்களுடைய நண்பர்கள் சிலர் அவர்களைக் கண்டு சில சமயம் பொறாமைப்படுவதும் உண்டு.

ஆண்டுகள் செல்லச் செல்ல அவர்களுடைய நட்பும் வளர்ந்து வந்தது. ஆனால், அவர்களுடைய **குணத்தில்** மாற்றங்கள் ஏற்பட்டன.

செல்வி நற்குணங்கள் உள்ளவளாக வளர்ந்து வந்தாள். மாலாவோ தீயகுணங்கள் உள்ளவளாக வளர்ந்து வந்தாள். அடிக்கடி மாலா மீது பலவகையான குற்றச்சாட்டுகள் ஏற்பட்டன. அதனால் இறுதியில் பள்ளி முதல்வர் அவளைப் பள்ளிக் கூடத்திலிருந்து நீக்க முடிவு செய்தார். பள்ளியிலிருந்து நீக்கப்பட்ட மாலா மீது ஒரு திருட்டுக் குற்றமும் வந்து சேர்ந்தது. அதனால் காவலர்கள் அவளைக் கைது செய்தனர். அவள் சிறையிலும் அடைக்கப்பட்டாள்.

சிறையில் இருந்த மாலா தன்னுடைய தவறுகளை எண்ணி மிகவும் வருந்தினாள். செல்வி மாலாவின் நெருங்கிய தோழியாக இருந்தாலும் அவள் படிப்பில் சிறந்து **விளங்கினாள்.** அவள் படிப்பிலேயே தன்னுடைய முழுக் கவனத்தையும் செலுத்தினாள். பள்ளிப் படிப்பை முடித்தவுடன் கல்லூரியில் சேர்ந்து படித்துப் பட்டம் பெற்றாள். அதன் பின்னர் ஆசிரியராக வேலை செய்ய ஆரம்பித்தாள்.

செல்வி தன் தொழிலில் கடினமாக உழைத்ததால் அவளின் புகழ், விரைவில் எங்கும் பரவியது. அவள் நாளடைவில் ஒரு சிறந்த ஆசிரியராக விளங்கினாள். ஆகையால் நல்லொழுக்கம் உள்ளவர்கள் வாழ்க்கையில் உயர்ந்து விளங்குவதும், தீயொழுக்கம் உள்ளவர்கள் வாழ்க்கையில் தோல்வியடைந்து வருந்துவதும் உண்மை என்பதை யாராலும் மறுக்க முடியாது.



www.testpapersfree.com

**Q13** முதல் **Q17** வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர் , **OAS** விடைத்தாளில் அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (**10** மதிப்பெண்கள்)

Q13. செல்வியும் மாலாவும் எப்படிப்பட்டவர்கள்?

(1) அவர்கள் ஒரே இடத்தில் வசிப்பவர்கள்
(2) அவர்கள் நெருங்கிய தோழிகள் ( )
(3) அவர்கள் ஒரே ஊரில் பிறந்தவர்கள்
(4) அவர்கள் சராசரி தோழிகள்

Q14. செல்வியையும் மாலாவையும் கண்டு ஏன் பிறர் பொறாமை கொண்டனர்?

(1) அவர்கள் ஒரே வகுப்பில் பயின்றதால்
(2) அவர்கள் ஒரே பள்ளியில் பயின்றதால்
(3) அவர்கள் சிறந்த நட்புக்கு எடுத்துக்காட்டாக விளங்கியதால் ( )
(4) அவர்கள் புகழோடும் செல்வத்தோடும் வாழ்ந்து வந்ததால்

Q15. மாலா பள்ளியிலிருந்து ஏன் நீக்கப்பட்டாள்?

(1) அவள் தீய ஒழுக்கத்தை மேற்கொண்டதால்
(2) அவள் கெட்ட நடைமுறைகளைப் பின்பற்றியதால்
(3) அவள் மீது பலவகையான குற்றச்சாட்டுகள் உண்டானதால் ( )
(4) அவள் பள்ளிக்குக் கெட்ட பெயர் வாங்கித் தந்ததால்

Q16. செல்வியின் புகழ் எதனால் எங்கும் பரவியது?

(1) அவள் ஆசிரியர் தொழிலைச் செய்ததால்
(2) அவள் ஒழுக்கமுடையவளாக இருந்ததால்
(3) அவள் கடினமாக உழைத்ததால் ( )
(4) அவள் மேன்மையான நிலையை அடைந்ததால்

Q17. இக்கதை கூறும் கருத்து என்ன ?

(1) நல்லொழுக்கம் வருத்தத்திற்கு வழி வகுக்கும்.
(2) நல்லொழுக்கம் தாழ்வுக்கு வழி வகுக்கும்.
(3) தீயொழுக்கம் உயர்வுக்கு வழி வகுக்கும் (
(4) நல்லொழுக்கம் உயர்வுக்கு வழி வகுக்கும்



327

www.testpapersfree.com

B4 சொற்பொருள்

Q18 முதல் Q20 வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர் , OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)

Q18. உதாரணமாக
(1) உண்மையாக
(2) இயல்பாக
(3) பொதுவாக ( )
(4) எடுத்துக்காட்டாக

Q19. குணத்தில்
(1) மனதில்
(2) தன்மையில்
(3) பாவனையில் ( )
(4) உள்ளத்தில்

Q20. விளங்கினாள்
(1) அறிந்தாள்
(2) புகழ்ந்தாள்
(3) திகழ்ந்தாள் ( )
(4) இருந்தாள்




www.testpapersfree.com

B5 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்

பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி:





## தேசிய பல் மருத்துவக் கழகம் ஏற்பாடு செய்யும் வருடாந்திர முகாம்!





அனுபவம் மிக்க
மருத்துவர்கள் உங்கள்
பற்களைச்
சோதித்து, முறையான
ஆலோசனைகளைக் கூறுவர்.

'லாட் ஒன்று' பேரங்காடியின்
இரண்டாம் மாடியின் வளாகத்தில்
ஏப்ரல் மாதம் முழுவதும்!
காலை 10 மணி முதல்
மதியம் 3 மணி வரை

3 முதல் 9 வயதுள்ள சிறுவர்களுக்குச் சோதனை இலவசம்! 10 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கட்டணம் $3 மட்டுமே!

முகாமில் கலந்துகொள்ளும்
அனைவருக்கும்
இலவச 'கோல்கேட்'
பல்தூரிகை





320

www.testpapersfree.com

21 முதல் 23 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6)

21. பல் மருத்துவ முகாமின் ஏற்பாட்டாளர் யார்?

1) லாட் ஒன்று பேரங்காடி
2) கோல்கெட் நிறுவனத்தார்
3) தேசிய பல் மருத்துவக் கழகம்
4) சிங்கப்பூர் மருத்துவக் கழகம்

( )

22. இம்முகாமில் கலந்துகொள்ள விரும்பும் பத்து வயது சுதா, எவ்வளவு கட்டணம் செலுத்த வேண்டும்?

1) $4
2) $3
3) $2
4) கட்டணம் தேவையில்லை

( )

23. யாருக்கு இலவச பல்தூரிகை வழங்கப்படும்?

1) 3 முதல் 9 வயதுள்ள சிறுவர்களுக்கு
2) 10 வயதுக்குள் உட்பட்டவர்களுக்கு
3) முகாமிற்கு வரும் பெரியவர்களுக்கு
4) முகாமில் கலந்துகொள்பவர்களுக்கு

( )



331

www.testpapersfree.com

' ஆ ' பிரிவு

C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

பின்வரும் பகுதியில் Q24 முதல் Q28 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (10 மதிப்பெண்கள்)

Q24 கடையில் பல தரப்பட்ட உணவுப் பொருள்கள் விற்கப்பட்டன. அம்மா __________ குறைந்த பொருளையே வாங்கினார். Q24 (   )

Q25 திடீரென்று பயங்கர இடி இடித்தது. ராணி அதிர்ச்சியில் ஒரு __________ சிலைபோல் நின்றாள். Q25 (   )

Q26 முகிலன் பணத்தைத் திருடினான். ஆனால், பிடிப்பட்டதும் அவன் தன் நண்பன் மீது __________ சுமத்தினான். Q26 (   )

Q27 நம் நாட்டு மக்களும் சுற்றுப்பயணிகளும் தேசியத் தினத்தைக் கண்டு களித்தார்கள். குறிப்பாக __________ வேடிக்கையைக் எல்லோரும் கண்டு வியந்தனர். Q27 (   )

Q28 'அதிர்ஷ்டம்' நகைக் கடை குட்டி இந்தியாவில் இருக்கிறது. நேற்று சிலர் கடையில் புகுந்து __________ அடித்தனர். Q28 (   )

| | |
|---|---|
| (1) பழி | (2) பலி |
| (3) விலை | (4) வாண |
| (5) கொள்ளை | (6) விளை |
| (7) கொல்லை | (8) கனம் |
| (9) கணம் | (10) வான |



www.testpapersfree.com

**D7 முன்னுணர்வுக் கருத்தறிதல்**

பின்வரும் பகுதியில் Q29 முதல் Q35 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (14 மதிப்பெண்கள்)

| | |
|---|---|
| அன்று ஞாயிற்றுக்கிழமை. வழக்கம்போல் __(Q29)__ சாந்தி தன் தாயாருடன் பூங்காவுக்குச் சென்றாள். தாயார் பின்னால் வர அவள் சற்று முன்னால் நடந்தாள். அப்போது திடீரென எங்கிருந்தோ வந்த பூச்சாடி சிறுமியின் தோளை உரசிக் கீழே __(Q30)__ உடைந்தது. சாந்தி __(Q31)__ வலியாலும் பெருங்கூச்சலோடு கீழே விழுந்தாள். அவள் தாயாரும் மற்றவர்களும் அவளை நோக்கி ஓடி வர, இன்னும் சிலர் பூச்சாடி எந்த மாடியிலிருந்து விழுந்தது என்று கண்டுபிடிக்க விரைந்தனர். நல்ல வேளை! அவளது உயிருக்கு __(Q32)__ ஏதும் இல்லை. மருத்துவ வண்டி அவளைச் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றது. | Q29 ( ) Q30 ( ) Q31 ( ) Q32 ( ) |
| குற்றவாளியைத் தேடிச் சென்றவர்கள் ஒருவனைப் பிடித்திழுத்துக் கொண்டு வந்தார்கள். வீட்டில் நடந்த சண்டையில் __(Q33)__ அடைந்து, சாடியைக் கீழே தூக்கி எறிந்ததாக அவன் கூறினான். இது __(Q34)__ செயல்! கொஞ்சம் __(Q35)__ அந்தச் சிறுமி தனது உயிரை அல்லவா இழந்திருக்கும். 'ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு' என்று நிரூபித்த அவனைக் காவலர்கள் விலங்கிட்டு அழைத்துச் செல்ல, கூடியிருந்த கூட்டம் கலைந்தது. | Q33 ( ) Q34 ( ) Q35 ( ) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (1) | பொறுப்பான | (2) | அன்றும் | (3) | தவறியிருந்தால் |
| (4) | விழுந்து | (5) | பயத்தால் | (6) | ஆபத்து |
| (7) | நழுவியிருந்தால் | (8) | பொறுப்பற்ற | (9) | எழுந்து |
| (10) | சீற்றம் | (11) | அதிர்ச்சியாலும் | (12) | பொறாமை |



332

www.testpapersfree.com

சுயவிடைக் கருத்தறிதல்
பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி

மதனும் குமரனும் ஒரே வட்டாரத்தில் பிறந்து வளர்ந்த இரு நண்பர்கள். அவர்கள் சிறு வயதிலிருந்தே இணைபிரியாத நண்பர்களாக இருந்தார்கள். மதன் எதிலும் 'போதும்' என்ற மனப்பான்மை உடையவன். ஆனால், குமரனோ பேராசைக்காரன்.

அவர்கள் பெரியவர்களானதும் வேலை தேடப் பட்டணத்திற்குச் சென்றார்கள். அவர்கள் இருவரும் மலைப்பகுதி வழியே நடந்து சென்ற போது மதன் கால் தடுக்கிக் கீழே விழுந்தான். அவன் விழுந்த இடத்தில் ஏதோ புதைக்கப்பட்டிருப்பதைக் கண்டு அதைத் தோண்டி எடுத்தான். அவனுக்கு ஒரு பெட்டி நிறையப் பொற்காசுகள் கிடைத்தன.

உடனே மதன் குமரனிடம் "நண்பா, நாம் தேடிச் சென்ற செல்வம் நமக்கு இங்கே கிடைத்துவிட்டது. இதை நான் கண்டெடுத்தாலும் இதில் சரி பாதியை நான் உனக்குக் கொடுக்கிறேன். நாம் ஊருக்குத் திரும்பி விடுவோம்", என்று கூறினான். இதைக் கேட்ட குமரன் புதையலில் அதிகமான பங்கு தனக்குக் கிடைக்க வேண்டும் என்று நினைத்து, "மதன், பங்கு பிரித்து நம் நட்பைக் களங்கப்படுத்த வேண்டாம். இப்போது நாம் ஆளுக்கு நூறு பொற்காசுகளை எடுத்துக் கொள்வோம். மற்றதைப் புதைத்து விடுவோம். தேவைப்படும்போது இருவருமே வந்து எடுத்துக் கொள்வோம்," என்று கூறினான்.

நண்பனின் வார்த்தையை நம்பிய மதன், குமரன் சொன்னபடியே செய்தான். இருவரும் மீதமுள்ள புதையலை ஒரு மரத்தடியில் புதைத்து வைத்தார்கள். மதன் கொடுத்த நூறு பொற்காசுகளை இரண்டே நாட்களில் செலவழித்துவிட்ட குமரன், மீதம் உள்ள புதையலைத் தானே எடுத்துக் கொள்ள எண்ணினான். அவன் உடனே மரத்தடிக்குச் சென்று மீதம் உள்ள பொற்காசுகளை எடுத்துக்கொண்டு காலிப் பெட்டியை மட்டும் மீண்டும் அங்கே புதைத்து விட்டான்.



www.testpapersfree.com

மறு நாள், பணம் தேவைப்பட்ட மதன் குமரனை அழைத்துக்கொண்டு மரத்தடிக்குச் சென்றான். அங்கு காலி பெட்டியைக் கண்டு அதிர்ந்து போனவன் போல் நடித்தான் குமரன். தன் தவற்றாஇ மறைக்க, 'மதன்! என்ன இது! நம் பொற்காசுகள் எங்கே?" என்று எதுவும் தெரியாததுபோல் கேட்டான். குமரன் தன்னை ஏமாற்றியதை உணர்ந்த மதன் மறுமொழி பேசாமல் அவ்விடத்தைவிட்டு நகர்ந்தான். இனிமேல் குமரனுடன் நட்புக் கொள்வது வீண் என்றும் நண்பர்களின் பேச்சை எளிதில் நம்பிவிடக்கூடாது என்றும் உணர்ந்தான்.

36 முதல் 41 வரை உள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. (20 மதிப்பெண்கள்)

36. குமரனும் மதனும் ஏன் பட்டணத்திற்குச் சென்றார்கள்? (3 மதிப்பெண்கள்)

37. மதன் எவ்வாறு பொற்காசுகளைக் கண்டுபிடித்தான்? (3 மதிப்பெண்கள்)

38. குமரன் ஏன் பொற்காசுகளைச் சரிபாதியாகப் பிரிக்க வேண்டாம் என்று கூறினான்? (4 மதிப்பெண்கள்)



334

www.testpapersfree.com

39. மதனை ஏமாற்ற நினைத்த குமரன் என்ன செய்தான்? (3 மதிப்பெண்கள்)

40. மதன் குமரனால் ஏமாற்றப்பட்டதை எப்போது உணர்ந்தான்? (3 மதிப்பெண்கள்)

41. இறுதியில் மதன் எடுத்த முடிவு என்ன? ( 4 மதிப்பெண்கள்)



335

www.testpapersfree.com

Answer Key

| | |
|---|---|
| 1 | 3 |
| 2 | 1 |
| 3 | 3 |
| 4 | 1 |
| 5 | 4 |
| 6 | 2 |
| 7 | 3 |
| 8 | 4 |
| 9 | 1 |
| 10 | 2 |
| 11 | 2 |
| 12 | 4 |
| 13 | 2 |
| 14 | 3 |
| 15 | 3 |
| 16 | 3 |
| 17 | 4 |
| 18 | 4 |
| 19 | 2 |
| 20 | 3 |
| 21 | 4 |
| 22 | 3 |
| 23 | 4 |
| 24 | 3 |
| 25 | 9 |
| 26 | 1 |
| 27 | 4 |
| 28 | 5 |
| 29 | 2 |
| 30 | 4 |
| 31 | 11 |
| 32 | 6 |
| 33 | 10 |
| 34 | 8 |
| 35 | 3 |

36. குமரனும் மதனும் வேலை தேட பட்டணத்திற்குச் சென்றார்கள்.

37. குமரன் கால் தடுக்கிக் கீழே விழுந்தபோது விழுந்த இடத்தில் ஏதோ புதைக்கப்பட்டிருப்பதைக் கண்டு அதைத் தோண்டி எடுத்தான். இவ்வாறு பொற்காசுகளைக் கண்டு பிடித்தான்.

38. குமரன் புதையலில் அதிகமான பங்கு தனக்குக் கிடைக்க வேண்டும் என்று நினைத்ததால் பொற்காசுகளைச் சரி பாதியாகப் பிரிக்க வேண்டாம் என்று கூறினான்.

39. மதனை ஏமாற்ற நினைத்த குமரன் மரத்தடிக்குச் சென்று மீதம் உள்ள பொற்காசுகளை எடுத்துக் கொண்டு காளிப் பெட்டியை மட்டும் மீண்டும் அங்கே புதைத்துவிட்டான்.

40. குமரன் காலி பெட்டியைக் கண்டு அதிர்ந்து போனவன்போல், பொற்காசுகள் எங்கே என்று எதுவும் தெரியாததுபோல் கேட்டபோது மதன் குமரனால் ஏமாற்றப்பட்டதை உணர்ந்தான்.

41. இனிமேல் குமரனுடன் நட்பு கொள்வது வீண் என்றும் நண்பர்களின் பேச்சை எளிதில் நம்பிவிடக்கூடாது என்றும் மதன் முடிவு எடுத்தான்.



www.testpapersfree.com

www.testpapersfree.com